**O.S.No.345/2010**

**Date:24.07.2018**

வாதி தரப்பு சாட்சி 2 – களஞ்சியம், த-பெ.சின்னஇளங்கான்

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சாமி கும்பிடுவது சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். இந்த வழக்கத்தை விட்டு யாராவது சாமி கும்பிட்டார்களா என்றால் ஒரு சாரார், மற்றொரு தரப்பினரை விட்டு விட்டு சாமி கும்பிட்டார்கள், அதனால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது, யார்,யார்சாமி கும்பிட்டார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் 1 முதல் 3 மற்றும் 10வது மரியாதைகாரர்கள் சாமி கும்பிட்டார்கள். யார், யார் சார்பாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் நாட்டாமை வகையறா மற்றும் கிராமத்து பொதுமக்கள் பேசி, கிராமத்திற்காக வழக்கு தாக்கல் செய்யச் சொன்னதன் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எந்தெந்த கிராம மக்கள் பேசினார்கள் என்றால் புதுப்பட்டி, கருங்காலக்குடி மற்றும் கொட்டகை மேடு கிராம மக்கள் பேசினார்கள். அந்த பேச்சு வார்த்தை பேசி, ஆவணம் எதுவும் எழுதினோமா என்றால் இல்லை. அவ்வாற எந்த பேச்சு வார்த்தையும் நடைபெறவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றாலும்சரியல்ல. கிராம கோவில்கள் முறைப்படி திருவிழா கொண்டாடி எத்தனை வருடம் இருக்கும் என்றால் சுமாா 34 வருடங்கள் இருக்கும். அந்த 34 வருடங்களுக்கு பின்னர் என்ன காரணத்திற்காக திருவிழா கொண்டாடப்படாமல் உள்ளது என்றால் முதல்மரியாதை காரர் கையாடல் செய்ததாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து, அதில் இருபத்தைந்தாயிரம் பணம் செலுத்தச் சொல்லி, அவரும் ஒத்துக் கொண்டு, அதன் பின்னர் இறந்து விட்டார். அதன் பின்னீட்டு திருவிழா நடக்கவில்லை. 1ம் பிரதிவாதி கையாடல் செய்ததாகக் கூறப்படும் வழக்க தொடர்பான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1வது மரியாதைகாரர் கிராம பணத்தை கையாடல் செய்ததாக எந்த வழக்கும் தாக்கல செய்யப்படவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. கோவிலில் மரியாதை, நிர்வாகம் பற்றி ஏற்கனவே நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.1 மற்றும் 2வது ஆவணத்தில் 3வது வாதியாக

கு.பெ.மு.மொக்கையன் மூப்பனார் இருக்கிறார் என்றால் சரிதான். அந்த வழக்கில் மூன்றாவது மரியாதைக்காக அவர் வாதியாக இருந்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்குகளில் 5, 6 பிரதிவாதிகளான வீரணன், பொன்னாண்டியின் மூதாதையர் யாரும் தரப்பினர் இல்லை என்றால் அந்த வழக்கில் அவர்கள் தரப்பினர்கள் இல்லை. மூன்றாவது மரியாதை தொடர்பாக ஏதேனும் பிரச்சனை உள்ளதா என்றால் உள்ளது. அது சம்பந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் தெரியாது. மூன்றாவது மரியாதை தொடர்பாக எந்த வழக்கும் இல்லைஎன்றாலும், மூன்றாவது மரியாதை 5 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு உள்ளதாக தெரிவித்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கோவில் மற்றும் கண்மாய் வருவாய் சம்பந்தமாக வழக்கு மதுரை சார்பு நீதிமன்றத்தில் தற்போதும் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனு நிலுவையில் உள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும். அதன் பின்னர் 2007 அல்லது 2010ல் சாமி கும்பிடுவதற்கு முயற்சிக்கப்பட்டதா என்றால் இளைஞர்கள் சாமி கும்பிட்டார்கள். எந்தவருடம் என்று தெரியவில்லை. சாமி கும்பிடுவதற்கு அனைத்து கோவில்களையும் பழுது பார்த்து கும்பாபிசேகம் செய்துள்ளனர் என்றால் சரிதான். அவ்வாறு இளைஞர்கள் கோவில்களை சீரமைத்துள்ள விபரத்தை நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் வழக்கிற்குப் பின்னீட்டுதான் இளைஞர்கள் கோவில் கும்பாபிசேகம் செய்தார்கள். 10ம்பிரதிவாதி ஏலம் எடுத்து, எத்தனை பேர் பெயரில் கிராமத்தில் வைப்பீடு செய்தார் என்றால் 10 பேர் மீது வைப்பீடு செய்தார். மீன்பிடி உரிமம் குத்தகைக்கு எடுத்தார் என்றால் சரிதான். அதன்பின்னர் 2010ல் சாமி கும்பிடுவதற்காக கிராம மக்கள் பேசி அந்த பணத்தை எடுத்தார்கள் என்றால் சரியல்ல, ஒரு தரப்பினர்தான் அந்த பணத்தை எடுத்தார்கள். காவல்துறையில் புகார் கொடுத்து, காவல்துறையினர் சொல்லித்தான் பணம் எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல் துறையில் யார் புகார் கொடுத்தது என்றால் 1, 2 மரியாதைகாரர்கள் புகார் கொடுத்தார்கள். ஊர் பொதுமக்கள் பேசிதான் ஒன்பது பேரும் பணம் எடுத்தார்கள் என்றாலும் காவல்துறையில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 2005-2006, 2006-2007 காலத்தில் கிராமக் கண்மாயை 10ம் பிரதிவாதி ஏலம் எடுத்து அதற்கான பணத்தை வைப்பீடு செய்யவில்லை என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளோம். அந்த தொகை தற்போது யாரிடம் உள்ளது என்றால் ஒரு வருட தொகை வைப்பீடு செய்யப்பட்டு, அதுவும் காவல் துறை மூலம் எடுக்கப்பட்டுள்ளது இரண்டு வருட பணம் முதல் இரண்டு மரியாதைகாரர்களிடம் உள்ளது. அவ்வாறு 1 மற்றும் 2

மரியாதைகாரர்களிடம் பணம் இல்லை என்றாலும், வழக்கிற்காக பணம இருப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பணம் இருப்பதற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 மாவட்ட ஆட்சியரிடம் கொடுக்கப்பட்ட மனுவில் கிராம மக்கள் ஒற்றுமையாக இருந்து சாமி கும்பிடுவதாக மனு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. அது சம்பந்தமாக சமாதானக் கூட்டம் நடைபெற்றதா என்றால் சமாதானக் கூட்டம் நடந்ததாகச் சொன்னார்கள், ஆனால் நான் கலந்து கொள்ளவில்லை. 2017-ல் மதுரை உயர்நீதிமன்றம் வழக்கம்போல் பாரம்பரியமாக திருவிழா கொண்டாடுமாறு உத்தரவிட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 1 முதல் 3 வாதிகள் 1 முதல் 3 மரியாதைக்காரர்களாக இருப்பதால், இவர்கள்தான் அந்த மரியாதைக்கார்ாகள் என்று மதுரை உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளதால் அதே கோரிக்கையை இந்நீதிமன்றத்தில் எழுப்ப முடியாது என்றால் சரியல்ல. 7ம் பிரதிவாதி செல்வராஜ், வழக்குப்படி தீர்ப்பாக வேண்டும் என்று எழுதிக் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. ஊர்மக்கள் சேர்ந்து முன்போல் சாமி கும்பிட்டால் 7ம் பிரதிவாதியின் வெற்றி பாதிக்கப்படும் என்பதால் அவரது தூண்டுதலின் பேரில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

<u>4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2004, 2007க்கான மீன் பிடி குத்தகை 10ம் பிரதிவாதி பெயரில் எடுக்கப்பட்டதற்கு ஒப்பந்தம் போடப்பட்டதா என்றால் போடப்படடுள்ளது. அந்தபத்திரம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். 10ம் பிரதிவாதி பெயரில் குறிப்பிட்டு ஏலம் எடுக்க என்ன காரணம் என்றால் ஊர் பொதுமக்கள் ஒன்று கூடி முடிவு செய்யப்பட்டது. 10ம பிரதிவாதி ஏலம் விட்டதை மறு ஏலம் விட்டு, 10 பேர் செலுத்த வேண்டும் என்று உடன்படிக்கை உள்ளதா என்றால் உள்ளது அந்த உடன்படிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த உடன்படிக்கையில்உள்ள 10 பேரில் ஒருவராவது இந்த வழக்கின் வாதிகளாக உள்ளனரா என்றால் இல்லை. அவர்கள் சொன்னதை கேள்விப்பட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல, கிராம மக்கள் சொன்னதன் பேரில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். 4ம் பிரதிவாதி இந்த வழக்கிற்கு தேவையில்லாத தரப்பினர் என்றால் சரியல்ல. அவரது அண்ணன் மாணிக்கம் இந்த வழக்கில் தரப்பினராக உள்ள நிலையில், 4ம் பிரதிவாதியை ஏன் தரப்பினராக சேர்த்துள்ளோம் என்றால் அவரும் சேர்ந்து சாமி கும்பிட்டதால் வழக்கு

தாக்கல செய்துள்ளோம். தேர்தல் முன் விரோதம் காரணமாக 4ம் பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால சரியல்ல. முதல் இரண்டு பரிகாரங்கள் ஒரே பரிகாரங்கள் என்றால்சரியல்ல. காழ்ப்புணர்ச்சியுடன் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

<u>11 மற்றும் 12 பிரதிவாதிகள்தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில் நான் 1ம் வாதி என்றால் சரிதான். இந்த வழக்க விபரங்கள் என் வழக்கறிஞரிடம் நான் சொன்னேன் என்றர்ல நான் மட்டும் இல்லை, 14 பேர் சொன்னோம். நான் எந்த வகையைச் சேர்ந்தவர் என்ற நாட்டாமைக்காரர்கள் ஆவோம். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக நாட்டாமை வகையறா மரியாதையை வாங்கி வந்தது என்றால் 1ம் பிரதிவாதி வாங்கி வந்தார். 2வது மரியாதையை 2ம் பிரதிவாதி வாங்கி வந்தார் என்றால் சரிதான். 3வது மரியாதையை மாணிக்கம் வாங்கி வந்தார் என்றால் சரியல்ல. 4வது மரியாதையை செல்வராஜ் வாங்கி வந்தார் என்றால் சரிதான். 5வது மரியாதையை ராஜகோபால் வாங்கி வந்தார் என்றால் சரிதான். 6வது மரியாதையை காந்தி வாங்கி வந்தார் என்றர்ல சரிதான். எனது வகையறாவுக்கு 1ம் பிரதிவாதிதான் மரியாதை வாங்கி வந்தார் என்றாலும், நான் எந்த மரியாதையும் வாங்கவில்லை என்றாலும் சரிதான். இந்த வாதிகளில் யாராவது மரியாதை வாங்கி வந்துள்ளனரா என்றால் சுழற்சி முறையில் மாறி, மாறி மரியாதை வாங்கி வருவோம். கடைசியாக ஐந்து வகை கோவிலும் எப்போது சாமி கும்பிடப்பட்டுள்ளது என்றால் 1983 என்று நினைக்கிறேன். வருடந்தோறும் திருவிழா நடக்கும் என்றால் சரிதான். பிரச்சனைகள் ஏற்பட்டு வட்டாட்சியர் அல்லது உயர்நீதிமன்ற உத்தரவுப்படி திருவிழா நடைபெறுகிறது என்றர்ல சரியல்ல,திருவிழா நடக்கவில்லை. திருவிழா நடக்காமல் இருக்கும் போது எந்த வருடம் எங்களை விட்டு விட்டு சாமி கும்பிட்டார்கள் என்றால் வருடம் ஞாபகம் இல்லை. வழக்கு தாக்கல் செய்த வருடம் என்றால் அதற்கு முதல் வருடம் மட்டும் எங்களை விட்டு சாமி கும்பிட்டார்கள். வழக்கு தாக்கல் செய்தபின்னர், உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடந்து, சமாதானக் கூட்டம் நடத்துமாறு உத்தரவிடப்பட்டது என்றால் சரிதான் அந்த சமாதானக் கூட்டத்தில் இந்த ஐந்து கரை மரியாதைக்காரர்களும் சேர்ந்துசாமி கும்பிடலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. கோவில் மாடுகளை திருட்டுத்தனமாக விற்றதாக ஒரு வழக்கு உள்ளது என்றால் விற்றது உண்மைதான், அந்த கோவில்மாடுகளை விற்றது இந்த வாதிகள் என்றால் சரியல்ல. வாதிகளின் பங்காளிகளாக இருக்கலாம். வா.சா.ஆ.4ல் என் பெயர் இல்லை. இதில் உள்ள நபர்கள் யாராவது வாதியாக உள்ளனரா என்றால் இல்லை. செல்வராஜ் என்பவர்

பிரதிவாதியாக உள்ளார். வா.சா.ஆ.4படி 10 பேர் பெயர்களில் பணம் வைப்பீடு செய்யப்பட்டிருந்தது. இதில் செல்வராஜ் மட்டும்தர்ன பிரதிவாதியாக உள்ளார் என்றால் அவர் மட்டும்தான் மரியாதைகாரார் என்பதால் சேர்த்துள்ளோம். இந்த புத்தகத்தின்படி ரூ.226- இருப்பு உள்ளது என்றால் சரிதான். பணம் எடுத்தது தெரியுமா என்றால் தெரியும். 5 மற்றும் 6 பிரதிவாதிகளுக்க பூர்வீகம் எந்த ஊர் என்றால் புதுப்பட்டி ஆகும். வீரணன், பொன்னாண்டி ஆகியோருக்கு மூன்றாவது மரியாதை மற்றும் கிராமத்தில் எந்த பாத்தியதையும் கிடையாது என்றால் சரியல்ல. அவர்களுக்கு மரியாதை உள்ளதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை, பெரியோர்கள் கொடுப்பார்கள். சாமி கும்பிடுவதற்கு வரி வசூல் செய்யும் பேரேடு உள்ளதா என்றால் உள்ளது. அந்த பேரேடு பெட்டகத்தில் உள்ளது. அதில் 5 மற்றும் 6 பிரதிவாதிகள் பெயர்கள் கிடையாது என்றாலும், ஒரு விவகாரத்தை உருவாக்குவதற்காக அவர்களை தரப்பினர்களாக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. கோவில் பணத்தை பெட்டகத்தில் போட்டுள்ளோமா என்றால் முன்பு போட்டிருந்தார்கள். அதன் பின்னர் வங்கியில் போட்டு பிரச்சனை ஏற்பட்டது. நான் கிராம கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளேனா என்றால் கலந்து கொண்டுள்ளேன். பணப்பொறுப்பு யாரிடம் இருக்கும் என்றால் 2ம் பிரதிவாதியிடம் இருக்கும். இவர்கள் ஐந்து பேரும் சாமி கும்பிடும் போது எங்களை ஒதுக்கி விட்டு எப்போது சாமி கும்பிட்டார்கள் என்றால் ஒதுக்கி வைத்து சாமி கும்பிட்டதால்தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. ஐந்து மரியாதைகாரர்களுக்கும் மூப்பு வாரிசாக ஒவ்வொருவர் உள்ளனர். அனைவரும் சேர்ந்து சாமி கும்பிடுவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் இல்லை. பிராதில் கோரியுள்ள பரிகாரங்கள் பற்றி தெரியுமா என்றால் ஞாபகமில்லை. இந்த ஐந்து கிராமத்திற்கு கட்டுப்பட்ட கோவில் நிாவாகம் சரியாக பராமரிக்கப்பட்டு வருகிறது என்றாலும், இடையில் கோவில் மாடுகளை வாதிகள் திருடி விற்றதால், கொடுக்கப்பட்ட புகாரிலிருந்து தப்பிப்பதற்காகுவம் 'கோவில் பணத்தில் பங்கு கேட்டு கொடுக்காததாலும்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கை நாட்டாமைக்காரர் சார்பாகத்தான் தாக்கல் செய்வதற்கு உரிமை உள்ளது என்றாலும், கிராமத்தின் சார்பாக வழக்கு தாக்கல் செய்வதற்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே நீதிமன்ற தீர்ப்புகள் மற்றும் அதிகாரிகளின் உத்தரவின்படி நடந்து கொண்டிருக்கும் திருவிழாக்களை சீர்குலைக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கோவில் பெட்டகத்தின் சாவி ஐந்து கரை மரியாதைகாரர்களிடம் உள்ளது என்றால் சரிதான். அவர்கள்தான் கோவில் நிர்வாகத்தை கவனித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.